" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "
**மதுரை மாநகராட்சி**

# மாமன்றக் கூட்டம்

**2010ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 09-ம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**அ) திருக்குறள் : " தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு "**

**பொருள் :** செய்யத்தக்க செயலை ஆராய்ந்து தெரிதலும், அதற்குரிய வழிகளைத் தேர்ந்து செய்தலும், பின் தன் கருத்தை ஐயமின்றித் துணிந்து சொல்ல வல்லவன் அமைச்சன்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) H4/02461/10**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு சுப்பிரமணியபுரம் மருந்தகத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வரும் மருத்துவர் திரு.K.சங்கரன் பணியில் சேர்ந்து 09.01.2010 பிற்பகல் உடன் 20 ஆண்டுகள் முடிவடைந்து விட்டதால் 10.01.2010 முற்பகல் முதல் ரூ.15600-3910 (ஆறாவது ஊதியக்குழு) என்ற சிறப்பு நிலை ஊதிய விகிதத்தில் ஊதியம் நிர்ணயம் செய்து வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.959**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) HF2/ 07872/ 10**

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் எண்.10ல் பணிபுரிந்து வரும் செல்வி.S.தேவி, நகர சுகாதார செவிலியர் வயதான தாய், தந்தையரை கவனிக்க யாரும் இல்லாத காரணத்தால் சென்னை மாநகராட்சிக்கு பணி மாறுதல் செய்யக் கோரி மனு செய்துள்ளதின் பேரில், அவரை பணி மாறுதல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

1. மேற்படி ஒருவழிப் பணிமாறுதல் அரசின் உரிய ஆணை பெற்ற பின்னரே ஏற்கலாம்.
2. மேற்படி ஒருவழிப் பணிமாறுதல் தொடர்பாக பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

**மாமன்ற தீர்மானம் எண்.960**

**பொருளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3)HF2 / 22705 / 10**

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் எண்.10ல் பணிபுரிந்து வரும் திருமதி.R.ஜெயலெட்சுமி, நகர சுகாதார செவிலியர் குழந்தையை கவனிக்க யாரும் இல்லாத காரணத்தால் சாத்தூர் நகராட்சிக்கு ஒருவழிப் பணி மாறுதல் செய்யக் கோரி மனு செய்துள்ளதின் பேரில், அவரை ஒருவழிப் பணி மாறுதல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

1. மேற்படி ஒருவழிப் பணிமாறுதல் அரசின் உரிய ஆணை பெற்ற பின்னரே ஏற்கலாம்.
2. மேற்படி ஒருவழிப் பணிமாறுதல் தொடர்பாக பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது

**மாமன்ற தீர்மானம் எண்.961**

**பொருளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) ம.வ 2/3187/2009**

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட பாரதியார் வணிக வளாகம் மற்றும் பிற இடங்களில் உள்ள சில கடைகள், 2000-2001 முதல் பூட்டிய நிலையில் உள்ள 80 கடைகளுக்கு வாடகைத் தொகை செலுத்தப்படாமல் இருந்ததால், கடைகளை பூட்டி பொறுப்பு எடுக்கும்படி ஆணையாளர் அவர்களின் உத்தரவின்பேரில் 04.01.2008 ல் பாரதியார் வணிக வாளகம் D மற்றும் F பிளாக் கடைகள் மற்றும் பிற இடங்களில் உள்ள கடைகளை காவல்துறை உதவியுடன் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் பூட்டி பொறுப்பு எடுக்கப்பட்டது. இக்கடைகளை மராமத்து மேற்கொண்டு பூட்டிய அனைத்து கடைகளையும் மறு ஏலம் / டெண்டர் நடத்துவதற்கு மாமன்றத் தீர்மானம் எண்.838 நாள்30.12.2009–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாமன்றத் தீர்மானத்தின்படி, 80 கடைகளுக்கு பல்வேறு தேதிகளில் ஐந்து முறை ஏலம் – டெண்டர் நடத்தி 68 கடைகளுக்கு அனுமதி உத்தரவு வழங்கப்பட்டது. மீதியுள்ள இனங்களுக்கு, 6வது முறையாக ஏலம்/ டெண்டர் நடத்தப்பட்டதில், ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. டெண்டரில் மட்டும் F பிளாக் மாடிக்கடை எண்.60-க்கு மட்டும் மாநகராட்சி மதிப்பை விட மாத வாடகை மற்றும் வைப்புத்தொகை கீழ்கண்டவாறு குறைத்து வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | கடை விபரம் / | கடை எண் | மாநகராட்சி வாடகை மதிப்பு | மாநகராட்சி வைப்புத்தொகை | டெண்டரில் கேட்டுள்ள மாதவாடகை / வைப்புத் தொகை | மாநகராட்சி மதிப்பைவிட வாடகை / வைப்புத்தொகை குறைவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | **"Dபிளாக்"** பாரதியார் வணிக வாளகம் / | 60 | 5000 | 1,50,000 | ரூ.3000 / 1,00,000 | ரூ.2000 / 50,000 |

மேற்கண்ட கடைக்குரிய மாதவாடகை மற்றும் வைப்புத்தொகை குறைவாக உள்ளதை, மாநகராட்சியின் வருவாய் இழப்பை தவிர்ப்பதற்காக, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று, டெண்டர்தாரர்களுக்கு கடையின் உரிமம் உத்தரவு வழங்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.962**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5)JNS2 / 32922 / 06**

மதுரை மாநகராட்சியில் நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாநகராட்சி பகுதிகளில் உள்ள குடிசைப்பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்பு பணிகளான குடிநீர்வசதி, பாதாள சாக்கடை வசதி, மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், சமுதாய கூடம் மற்றும் சமுதாய கழிப்பறை ஆகிய பணிகள் நடைபெற்று வருகிறது. சமூக பொருளாதாரத்தினை மேம்படுத்துதல், கல்வி, சுகாதாரம் மற்றும் சமுக பாதுகாப்பு ஒருங்கிணைத்தலும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின் ஓர் பகுதியான BSUP திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதிகளில் உள்ள குடிசை வீடுகள் மற்றும் ஓட்டு வீடுகளை கான்கீரிட் வீடுகளாக மாற்றி கட்டுவதற்கும் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கும், இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே 22766 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் குடிசை வீடுகள் மற்றும் ஓட்டு வீடுகளை கான்கீரிட் வீடுகளாக மாற்றி கட்டுவதற்கு தேர்வு செய்யப்பட்ட வறுமைக்கோட்டிற்கு கீழ் வசிக்கும் பயனாளிகள் குடும்பத்தை ஏற்கனவே மதுரை மாநகராட்சி வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் வரிசை எண்.1,06,607ஐ தொடர்ந்து 1,06,608 முதல் 1,29,373 வரை தொடர் எண்ணிட்டு பட்டியலில் சேர்க்கவும், இதர நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.963**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**6) ம.தி.1/19393/99**

மதுரை மாநகராட்சி தற்போது 51.82ச.கி.மீ பரப்பளவு கொண்ட பகுதியில் பாதாள சாக்கடை வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், தரமான சாலை வசதி, தெரு விளக்கு மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய திட்டங்களை பொதுமக்களுக்கு திறம்பட செய்து வருகிறது. மேற்கண்ட வசதிகள் அனைத்தும் மதுரை மாநகராட்சி எல்லையினை ஒட்டியுள்ள வளர்ச்சியடைந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கும் கிடைக்க ஏதுவாக திட்டமிடவும் செயல்படுத்தவும் கீழ்கண்ட உள்ளாட்சி அமைப்புகளை மதுரை மாநகராட்சியுடன் இணைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது..

| நகராட்சிகள் | பேரூராட்சிகள் | ஊராட்சிகள் | |
|---|---|---|---|
| 1.ஆணையூர் | 1.ஹார்விபட்டி | 1.மேலமடை | 6.திருப்பாலை |
| 2.அவனியாபுரம் | 2.திருநகர் | 2.உத்தங்குடி | 7.சின்ன அனுப்பானடி |
| 3.திருப்பரங்குன்றம் | 3.விளாங்குடி | 3.வண்டியூர் | 8.சிந்தாமணி |
| | | 4.கண்ணணேந்தல் | 9.ஐராவதநல்லூர் |
| | | 5.நாகனாகுளம் | 10.புதுக்குளம் பிட் – II |
| | | | 11.தியாகராஜர் காலனி |

மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து மொத்தம் 147.997ச.கி.மீ பரப்பளவு கொண்ட மாநகராட்சியாக விரிவாக்கம் செய்ய அரசு உரிய ஆணை பிறப்பிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் மூலமாக அரசை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.964**

**மதுரை மாநகராட்சியுடன் இணைப்பதற்கு மாநகராட்சியின் எல்லையை ஒட்டியுள்ள உள்ளாட்சி அமைப்புகள் இசைவு தெரிவித்துள்ளதாலும், உள்ளாட்சி அமைப்புகளில் வசிக்கும் பொதுமக்கள் நலன் கருதியும் இந்த உள்ளாட்சி அமைப்புகளை மதுரை மாநகராட்சியுடன் இணைப்பதற்கு தக்க ஆணை பிறப்பிக்க அரசைக் கேட்டுக் கொள்ள மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**(ஒம்...)ஜி.தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 09.09.2010**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2010ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 09-ம் நாள் வியாழக்கிழமை காலை 12.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## <u>அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

**<u>1) மந6/மந2/26647/09</u>**

மதுரை மாநகராட்சி பகுதிகளில் இந்திராகாந்தி தேசிய முதியோர் / விதவை / மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகள் 24164 நபர்களுக்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்க்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக ந.க.எண்.84200 / 2009 எம்3 நாள்:11.08.2010 கடிதத்தில் கோரியதிற்கிணங்க மேற்படி பட்டியலில் கண்டுள்ள பயனாளிகளை ஏற்கெனவே மதுரை மாநகராட்சி வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளோர் வ.எண்.4,23,481ஐ தொடர்ந்து 4,23,482 முதல் 4,47,645 வரை தொடர் எண்ணிட்டு மதுரை மாநகராட்சி வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்க்க கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.965</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**<u>2) மதி1/81419/96</u>**

மதுரை மாநகராட்சி வண்டியூர் வாய்க்கால் புறம்போக்கு நிலத்தில் கட்டிய திரு.கே.சுப்புராஜ் என்பவர் கட்டிய வீட்டை மாநகராட்சியால் அகற்றப்பட்டதற்கு மாற்று இடம் வழங்க அரசின் ஆணை கோரப்பட்டதில் திரு.கே.சுப்புராஜ் என்பவருக்கு மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான அருள்தாஸ்புரம் சர்வே வார்டு X, பிளாக் எண் 57, TS.No.2300/4ல் உள்ள காலியிடத்தில் 600ச.அடி பரப்பளவுள்ள நிலத்தினை வழங்க அரசாணை (நிலை) எண் 142, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள்:02.08.2010 வரப்பெற்றுள்ளதனை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.966</u>**
**பதிவு செய்யப்பட்டது.**

**<u>3) மதி1/3745/2009</u>**

மதுரை மாநகராட்சி வார்டு எண் 65 மாடக்குளம் கிராமம் புல எண்421/2 . 423/1ல் கட்டுப்பட்ட மனை எண் 7 திரு.சீத்தாராமன் என்பவருக்கு சொந்தமான நிலத்தில் மாநகராட்சி பாதாள சாக்கடை பைப்லைன் பதிக்கப்பட்டதற்கு மாற்று இடம் வழங்குமாறு திரு.சீத்தாராமன் என்பவர் கோரியிருந்ததன் பேரில் இம்மாநகராட்சி தனது மாமன்ற தீர்மானம் எண் 737/16.7.09-ல் பாதாளச்சாக்கடை பைப்லைன் பதித்த இடத்தினை இனாம் சாசனம் மூலம் பெற்றுக் கொண்டு அதற்கு பதில் சர்வே வார்டு 5A சர்வே எண் 117-ல் கட்டுப்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் 1673 ச.அடி நிலத்தினை மாற்று இடமாக வழங்கலாம் என தீர்மானம் நிறைவேற்றி உரிய ஆணை வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 39192/2009 மாநஅ3 நாள்:07.12.2009–ல் மாற்று இடம் வழங்குவதற்கு பதிலாக நட்டஈட்டு தொகை வழங்கலாமா என கோரியதின் பேரில் மனுதாரரிடம் நட்டஈட்டு தொகை பெற்று கொள்ள சம்மத கடிதம் கோரப்பட்டதில் மனுதாரர் மாமன்ற தீர்மானத்தின்படி மாற்று இடம் வழங்குமாறு தெரிவித்தார்.

நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண்39192/2009, மாந.அ3 நாள்:17.03.2010ல் மனுதாரருக்கு மாற்று இடமாக வழங்க உத்தேசித்துள்ள இடம் மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடமாக உள்ளதால் வேறொரு இடம் தேர்வு செய்து அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்பேரில் வேறு இடம் ஆய்வு செய்யப்பட்டு சர்வே வார்டு 1, பிளாக் எண் 8, சர்வே எண்19ல் கட்டுப்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் திரு.சீத்தாராமன் என்பவருக்கு மாற்று இடம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இடம் சர்வே ஆவணங்களில் தண்ணீர் தொட்டி என உள்ளது. இடத்தில் தற்போது பயன்படுத்த இயலாத பயனற்ற நிலையில் ஒரு சிறிய கட்டிடமும், ஒரு மோட்டார் ஸ்விட்ச் அறையும் ஒரு ஆழ்துளைக் கிணறு மட்டும் உள்ளது. மீதமுள்ள இடம் காலியிடமாக உள்ளது. ஆகவே, மனுதாருக்கு மாற்று இடமாக இந்த இடத்தில் வடமேற்கு மூலையில் 155 ச.மீ இடத்தை நகராட்சி நிர்வாக இயக்குநரின் உத்தரவை பெற்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரியதில் மாமன்றம் 29.06.2010ந்தேதிய தனது மாமன்றத் தீர்மானம் எண்.938ல் நகரமைப்பு குழு ஆய்வு செய்து முடிவு செய்ய தீர்மானிக்கிறது என தீர்மானம் நிறைவேற்றியுள்ளதன் பேரில் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவின் ஒப்புதலை கோரப்பட்டதில் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழு தீர்மானம் எண்.22 நாள்:23.07.2010ல் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்கண்ட தீர்மானத்தின் அடிப்படையில் திரு.S.சீத்தாராமன் என்பவருக்கு மாற்று இடமாக சர்வே வார்டு 1, பிளாக் எண்.8, சர்வே எண்19ல் கட்டுப்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 155ச.மீ. இடத்தை நகராட்சி நிர்வாக இயக்குநரின் உத்தரவை பெற்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.967</u>**
**நகராட்சி நிர்வாக இயக்குனர் ஒப்புதல்பெற குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**<u>4) தெமவ5/0440/10</u>**

மதுரை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு.38, கதவு எண்.88 அம்மன் சன்னதி தெரு வரிவிதிப்பு எண்.69748. இவ்வலுவலக கேட்பு பதிவேட்டில் சிருங்கேரி குரு மடம் என்று உள்ளது.

மேற்படி கட்டிடத்திற்கு வரி செலுத்துவதில் இருந்து நிரந்தர விரிவிலக்கு அளிக்குமாறு கோரியுள்ள 20/01/10 தேதிய சிருங்கேரி சங்கரமாத் – Dharmadhikari பொறுப்பு வகிக்கும் திரு.S.சங்கரநாராயணன்.பி.இ., என்பவரது மனு பரிசீலனை செய்யப்பட்டது.

மேற்படி கட்டிடம் விநாயகர், விஸ்வநாதர், ஆஞ்சநேயர் போன்ற மூர்த்திகளுக்கு பூஜை செய்து வழிபடும் வழிபாட்டு தலமாக உள்ளது.

எனவே, மேற்படி கட்டிடத்திற்கு (வரி விதிப்பு எண்.69748) மதுரை மாநகராட்சி சட்டம் பிரிவு எண்.122(A) அடிப்படையில் வரி செலுத்துவதில் இருந்து நிரந்தர விரிவிலக்கு அளிப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.968</u>**
**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு ஒப்புதல் பெற்றபின்பு மாமன்றத்திற்கு பொருள் வைக்கவும்.**

**<u>5) ம.ந.2/34976/09</u>**

இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் சுகாதார ஆய்வாளர்களாக பணியாற்றும் திரு.A.அர்ஜீணன் மற்றும் மனோகரன் ஆகியோர், இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை, சென்னை அலுவலக கடிதம் எண்.2530/PFA/2009/S2,நாள்:0707.2010ம் தேதிய கடிதத்தின்படி உணவு ஆய்வாளர்களாக பணியாற்ற அனுமதித்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை (உணவு மாதிரி எடுத்தல்) செய்வதற்கான செலவினத்திற்கு நிரந்தர முண்பணமாக தலா ரூ1000/- வழங்க மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.969</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்..) ஜி.தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் : 07.09.2010.**
**மதுரை.**

* * * * * * * *

# மதுரை மாநகராட்சி
# மாமன்றக் கூட்டம் – நாள் : 09.09.2010
# TABLE AGENDA

**1) ம.தி.1/34976/09**

மதுரை மாநகராட்சி வார்டு எண்.66, சர்வே வார்ட 22, பிளாக் எண்.18, சர்வே எண்.71 முத்துராமலிங்கபுரம் E.B. மெயின் ரோடு, மாநகராட்சி நவீன கழிப்பறையை ஒட்டி ஒரு ஊர்புற நூலகம் கட்ட **5–** சென்ட் நிலம் காலி இடத்தை ஒதக்கித்தருமாறு 66**–** வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.கணேசன் அவர்களும் மாவட்ட நூலக அலுவலர் தமது சர்வே ஆவணங்களில் **சாலை** என ஆணையாளர் மதுரை மாநகராட்சி பெயரில் தாக்கலாகி உள்ளது. மேற்கண்ட இடத்தில் **5** சென்ட் பரப்பளவுள்ள நிலத்தினை ஒட்டி நூலக கட்டிடம் கட்டுவதற்கு தற்கால மார்க்கெட் மதிப்பின்படி நிலக்கிரையம் பெற்றுக்கொண்டு ஊர்ப்புற நூலகம் கட்ட இடத்தை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்தரவைப் பெற்று ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.970**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்..) ஜி.தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் : 09.09.2010.**
**மதுரை.**

* * * * * * * *